# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2. தியாகராயா சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),தேனாம்பேட்டை,
எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, சென்னை-600 018, தொலைபேசி எண்.24347590.

**விசாரணை நாள் 23-05-2018**

**முன்னிலை**

**முனைவர் எம்.ஷீலா பிரியா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர்**

**வழக்கு எண்.SA-403/மா.த.த.ஆ/2018**

திரு M.P.முருகேசன் - மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பெத்தநாயக்கன்பாளையம்,
சேலம் மாவட்டம்-636 109

---------

**ஆணை**

| | |
|---|---|
| மனுதாரரின் 6(1)ன் கீழான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவின் நாள் | 18.06.2017 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 17.07.2017 |
| 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.08.2017 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 11.09.2017 |
| 19(3) ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.01.2018 |

இன்றைய விசாரணைக்கு மேல்முறையீடுதாரர் திரு M.P.முருகேசன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு சு. முருகானந்தன், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், பெத்தநாயக்கன்பாளையம், சேலம் மாவட்டம் ஆஜரில் இருந்தார்.

2. மேல்முறையீடுதாரர் சேலம் கிழக்கு வட்டம் சிகாமலை வடக்கு நாடு கருமந்துரை அஞ்சல் கருமந்துரை to சேலம் மெயின் ரோட்டில் உள்ள அரசு ஒழுங்கு முறை விற்பனை கூடம் அருகில் யோகவேல் S/o. மொட்டையன் என்பவருக்கு சுமார் 12 ஏக்கர் நிலம் அதில் தனது தந்தை மு.பழனிவேல் S/o. முத்துக்கவுண்டர், 1986 முதல் 1988க்குள் 6 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கிய டாக்குமெண்ட் நெம்பர், ஆவண எண் போன்றவற்றை தகவலாக வழங்க வேண்டும் என்றும் இதனை தொடர்ந்து மொத்தம் 9 இனங்களில் தகவல்கள் கோரி தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)ன் கீழ் பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், அவர்களுக்கு மனு அனுப்பியுள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 17.07.2017 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அளித்துள்ளார். அதில் மேல்முறையீடுதாரர் கோரியுள்ள விவரங்களை www.tnreginet.net என்ற இணையத்தளத்தில் மனுதாரரே பார்வையிட்டு கொள்ளலாம் என்றும்

அல்லது பதிவு விதிகளின்படி கட்டணம் செலுத்தி வில்லங்கமனு சமர்பித்து வில்லங்கச்சான்று பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் திருப்தியடையாத மேல்முறையீடுதாரர் 16.08.2017 அன்று மேல்முறையீட்டு அலுவலருக்கு முதல் மேல்முறையீடு செய்துள்ளார். இதற்கு மாவட்ட பதிவாளார் அலுவலகம், சேலம் அவர்கள் மேல்முறையீடுதாரருக்கு அனுப்பிய பதிலில் சார்பதிவாளர் வழங்கிய தகவல் சரியே என தெரிவித்துள்ளார். இதன் பிறகு 09.01.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்துள்ளார். அதன் பேரில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையின்போது மேல்முறையீடுதாரர் தான் சர்வே நெம்பர் வழங்கியிருப்பதாகவும் எனவே தான் கோரிய தகவல்கள் வழங்க வேண்டும் என தெரிவித்தார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் சர்வே எண்கள் வழங்கியிருந்தாலும் தேடுதல் கட்டணம் மற்றும் கணிணி கட்டணம் செலுத்தினால் மட்டுமே தேட இயலும் என தெரிவித்தார்.

4. திரு. O. முத்து என்பவர் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனு W.P.MD Nos. 7009 to 7013 of 2014 என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தமது 03.06.2014 தேதியிட்ட ஆணைகளில் வில்லங்கச் சான்று பதிவுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி தான் பெற வேண்டும் என தமிழ்நாடு தகவல் ஆணையம் பிறப்பித்த ஆணையை உறுதி செய்துள்ளது.

5. எனவே பத்திரப்பதிவுகள் குறித்த விவரங்கள்/ஆவணங்கள் தேவைப்பட்டால் பதிவுச் சட்டம் அல்லது சங்கச் சட்டத்தில் (Registration Act or Society Act) குறித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்ப வழிமுறையை பின்பற்றி அதற்குரிய கட்டணத்தை செலுத்தி அவைகளை பெற்றுக் கொள்ளலாம் என மேல்முறையீடுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு வழக்கு முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/- (எம்.ஷீலா பிரியா)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA-403/மா.த.த.ஆ/2018</u>**
**<u>பெறுநர்</u>**
திரு M.P.முருகேசன்,
L40B, பாரதிதாசன் காலனி,
கே,கே,நகர், சென்னை-600 078.

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பெத்தநாயக்கன்பாளையம்,
சேலம் மாவட்டம்-636 109.
JJ/PA 04/06/2018